ඩිජිටල් ආර්ථික අමාත්‍යාංශය
டிஜிட்டல் பொருளாதார அமைச்சு
MINISTRY OF DIGITAL ECONOMY

පුද්ගලයන් ලියාපදිංචි කිරීමේ දෙපාර්තමේන්තුව
ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்
DEPARTMENT FOR REGISTRATION OF PERSONS

10 වන මහල, සුහුරුපාය, ශ්‍රී සුභූතිපුර පාර, බත්තරමුල්ල.
10 ஆம் மாடி,சுஹுருபாய, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை.
10th Floor, Suhurupaya, Sri Subhuthipura rd, Battaramulla.

මගේ අංකය / எனது இல. / My Ref. DRP/OP/10/15/01
ඔබේ අංකය / உமது இல. / Your Ref.
දිනය / திகதி / Date 2026.02.27

"විශ්වසනීය පුද්ගල අනන්‍යතාව හැඳුනුම්පතයි" "அடையாள அட்டை - நம்பகத்தன்மையான தனிநபர் அடையாளம்" "Identity Card, the Trusted Personal Identity"

திணைக்கள சகல பணிக்குழாமிற்கு,

**<u>தேசிய அடையாள அட்டையில் முகவரி மற்றும் பிறந்த இடத்தை ஆங்கிலத்தில் உள்ளிடுதல்.</u>**

தேசிய அடையாள அட்டையில் முகவரியை ஆங்கிலத்தில் உள்ளிடும்போது விண்ணப்பதாரர் கோரிய முகவரி மற்றும் பயன்பாட்டில் உள்ள ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில மொழியுடன் கிராமம்/நகரம்/வீதி போன்றவை தேசிய அடையாள அட்டைக்கு உள்ளிடுவதில் பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ளன என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே, 2026.03.01 ஆந் திகதி முதல் கீழே உள்ள வழிமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தயவாய் தெரிவித்துக் கொள்கிறேன்.

I. தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் போது விண்ணப்பதாரரால் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரி மற்றும் பிறந்த இடம் ஆங்கிலத்தில் சரியாக உள்ளிடப்பட்டுள்ளதா என்பதை விண்ணப்பங்களை பாரமேற்கும் போது சரிபார்க்க வேண்டும். அங்கு வழக்கமான முறையை விட ஆங்கிலத்தில் எழுதப்பட்ட எழுத்துக்களில் வேறுபாடு காணப்பட்டால், அது தொடர்பாக விண்ணப்பதாரரிடம் விசாரித்து சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

II. முகவரி எழுதும்போது இறுதியில் உள்ள பகுதி சரியாக ஆங்கிலத்தில் எழுதப்படவில்லை என்பதைக் கவனிக்கும் சந்தர்ப்பங்களில் Google Map இல் குறிப்பிடப்பட்டுள்ள படி விண்ணப்பத்தில் உள்ளிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பதுடன் ஏனைய பகுதிகளை விண்ணப்பதாரர் தவறாக கோரியிருந்தால் அந்த கிராமங்கள்/நகரங்கள்/வீதிகள் போன்றவற்றை அட்டவணைகளின்படி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

02. மேற்கூறியவற்றுடன் விண்ணப்பதாரர் உடன்படவில்லை என்றால், பதவிநிலை உத்தியோகத்தரின் ஆலோசனைக்காக விண்ணப்பத்தை பரிந்துரைக்க வேண்டும். எனவே, விண்ணப்பதாரருக்கு மிகவும் துல்லியமான தேசிய அடையாள அட்டையை வழங்குவது எங்கள் பொறுப்பாகும் என்பதால், மேற்கண்ட அறிவுறுத்தல்களின்படி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தயவாய் கேட்டுக்கொள்கிறேன்.

இது தொடர்பில் தாங்கள் நல்கும் ஒத்துழைப்பினை மேலாகக் கருதுகின்றேன்.

**எம்.எஸ்.பீ.சூரியப்பெரும**
ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளர் நாயகம் (ப.க)

**பிரதிகள் :**

01. செயலாளர், டிஜிட்டல் பொருளாதார அமைச்சு - தெ.கொ.
02. சகல மாவட்டச் செயலாளர்கள் - தெ.கொ.
03. சகல பிரதேச செயலாளர்கள் - தெ.கொ. மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் திணைக்களத்தில் இணைக்கப்பட்டுள்ள சகல அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் அறியத்தருவதற்கு

දුරකථන / தொலைபேசி / Telephone (011) 5226100
ෆැක්ස් / பெக்ஸ் / Fax (011) 2862198
ඊ-මේල් / மின்னஞ்சல் / E-mail info@drp.lk
වෙබ් / இணையதளம் / Web www.drp.gov.lk